ஹொரண நகர சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹொரண நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 181(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹொரண நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு,

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தேறிய காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது மிகுதியில் சீராக்ககங்களை மேற்கொள்ளும் போது பற்றாக்குறை ரூபா 25,856,975 ஆக இருந்த போதும் ரூபா 24,311,643 ஆகவும் பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 61,787,428 ஆக இருந்த போதும் ரூபா 60,242,097 ஆகவும் காண்பிக்கப்பட்டதுடன் நிலையான வைப்பு வட்டியாக ரூபா 7,133,944 சீராக்க வேண்டியிருந்த போதும் ரூபா 4,332,992 உம் முன்னைய ஆண்டின் சீராக்கமாக எந்த ஒரு சான்றுகளும் காணப்படாத ரூபா 592,346 உம் சீராக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படுவதுடன் கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள் மற்றும் முன்னைய காலப் பகுதியின் தவறுகள் முன்னைய ஆண்டிற்கான சீராக்கமாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.31 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஆன காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போதும் ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு ரூபா 107,531 ஆக இருந்த போதும் ரூபா 119,982 ஆகவும் மீளாய்வாண்டில் தொழிற்படு மூலதன சீராக்கத்தில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக முதலீட்டு மீதியில் மாற்றமான ரூபா 19,362,358 காசு வெளிப்பாய்ச்சலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.	நடைமுறைப் பொறுப்புக்களின் அதிகரிப்பாக ரூபா 119,928 சீராக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 19,362,358 காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய நடைமுறை சொத்துக்களின் குறைவு/ அதிகரிப்பாக சீராக்கப்பட்டுள்ளது.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் ஆன காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு செய்தல் ரூபா 14,693,072 ஆக இருந்த போதும் ரூபா 18,489,571 ஆகவும் மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்கப் பெற்ற ரூபா 1,165,823 ஆன நிலையான வைப்பு வட்டி ரூபா 1,152,686 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவின் கீழ் ரூபா 18,489,571 காண்பிக்கப்பட்டதுடன் கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ரூபா 14,693,072 ஆன பெறுமதி 2024 திசெம்பர் 31 கணக்கில் இனங்காண முடியாது இருந்ததுடன் நிலையான வைப்பு வட்டி 2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கடந்த ஆண்டில் ரூபா 325,704 கடன் பட்டோர் கணக்கு குறைத்து பதியப்பட்டமை, திரண்ட நிதியம் ரூபா 297,334 இனால் இரு தடவை செலவு வைக்கப்பட்டமை, அலுவலக உபகரணங்கள் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 719,071 மீதி பேரேட்டில் ரூபா 299,668 ஆக குறிப்பிடப்பட்டமை மீளாய்வாண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி சிட்டையிடல் ரூபா 18,049,597 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றில் ரூபா 17,980,377 ஆக	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

	காண்பிக்கப்பட்டமையால் ஆதனவரி சிட்டையிடல் வருமானம் ரூபா 69,220 குறைத்தும், மீளாய்வாண்டின் போது 2025 ஆம் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 193,784 ஆன ஆதனவரி வருமானம் நிலுவை ஆதனவரிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதனால் கிடைத்த வருமானக் கணக்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரிக் கணக்கு அப்பெறுமானத்தால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(இ)	மீளாய்வாண்டின் நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் போது பெறப்பட்ட ரூபா 153,078 ஆன கிடைத்த கழிவு விரிவான வருமானக் கூற்றில் வருமானமாக காண்பிக்கப்படாது இருந்ததுடன் நூலக புத்தகங்களுக்காக கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமானத் தேய்வு ரூபா 1,545,331 திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியின் மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஈ)	மீளாய்வாண்டிற்குரிய ரூபா 932,263 ஆன விநோத வரி வருமானம் ரூபா 754,488 ஆக ரூபா 177,775 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டின் போது ரூபா 50,000 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் தளபாடம் மற்றும் உபகரணக் கணக்கில் வரவு வைக்காமையின் காரணமாக தளபாட உபகரணங்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஊ)	2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கிடைக்கப் பெற்ற மூலதன மாணியங்களில் ஒவ்வொரு பெறுமானத் தேய்வு சதவீதத்தின் பிரகாரம் காலக் கழிவு கணிப்பிடப்பட்டு அப்பெறுமதி மீளாய்வாண்டின் வருமான செலவினத்தில் இனங்காண வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும்.	மேற்படி

	மேற்கொள்ளாமல் 2024 சனவரி 01 இல் உள்ளவாறு பௌதீக திட்டத்தின் கீழ் காணப்பட்ட ரூபா 35,682,250 ஆன மூலதன மாணியப் பெறுமதியில் 10 சதவீதத்திற்கு சமமான அளவான ரூபா 3,568,225 மீளாய்வாண்டின் மூலதன மாணியமாக வருமானத்தில் இனங்காணப்பட்டிருந்தது.		
(எ)	மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 1,846,899 ஆக இருந்த போதும் ரூபா 1,059,818 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 787,081 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டியான ரூபா 1,846,899 தொகை பரீட்சை மீதியில் சரியாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.	மேற்படி

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 02 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுமொத்தத்திற்கும், அவற்றுக்குரிய பட்டோலைகள் / பேரேட்டுக் கணக்குகளில் காணப்படுகின்ற மீதிகளின் கூட்டுத் தொகைக்கும் இடையே ரூபா 4,277,669 இணக்கம் இன்மை அவதானிக்கப்பட்டது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கூட்டுப் பெறுமதி ரூபா 24,842,504 ஆன 04 கணக்கு விடயங்களுக்குரிய பட்டோலைகள், மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்காமையின் காரணமாக திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாது இருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் சரியாக சமர்ப்பிக்கப்படும்.	பட்டோலைகள் மற்றும் மீதியை உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 25,856,975 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 24,814,535 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	26,530,977	24,632,348	21,275,807	6,816,030	23,440,788	21,296,813	21,880,547	9,457,132
ii.	வாடகை	27,128,382	19,576,313	14,259,720	9,312,260	15,417,482	12,575,201	10,775,233	6,396,172
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,704,500	479,000	479,000	-	3,404,500	500,000	523,000	-
iv.	ஏனைய வருமானம்	2,116,000	2,866,650	1,625,975	1,240,675	-	-	-	-
		--------------	------------	-------------	------------	--------------	------------	-------------	------------
		57,479,859	47,554,311	37,640,502	17,368,965	42,262,770	34,372,014	33,178,780	15,853,304
		========	=======	========	=======	=======	======	=======	======

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**ஆதனவரி**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 7,648,041 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 4,207,167 அதாவது 44 சதவீதம் அறவிடப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 17,980,377 சிட்டையிடலில் ஆண்டின் போது ரூபா 3,285,321 அதாவது 18 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை மீதிகளை விரைவாக அறவிடல் வேண்டும்.
(ii)	ஆதனவரி காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ஆதனவரி நிலுவை ரூபா 2,791,749 உம், 03 இற்கும் 05	01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ஆதனவரி நிலுவையில் ரூபா 1,113,748 உம், 03 இற்கும் 05	நிலுவை மீதி விரைவாக அறவிடப்படல் வேண்டும்.

	வருடங்களுக்கும் இடையிலான ஆதனவரி நிலுவை ரூபா 2,272,708 உம், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 939,982 உம் ஆக இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 486,124 ஆகும்.	வருடங்களுக்கும் இடையிலான ஆதனவரி நிலுவையில் ரூபா 414,231 உம், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான நிலுவையில் ரூபா 86,931 உம், 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையில் 53,383 உம் அறவிடப்பட்டுள்ளது.	
(ஆ)	**வாடகை**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கடை வாடகை நிலுவை ரூபா 2,974,315 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 604,388 அதாவது 20 சதவீதம் அறவிடப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 13,656,431 கடை வாடகை சிட்டையிடலில் ஆண்டின் போது ரூபா 2,037,927 அதாவது 15 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை.	நிலுவை வருமானத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(ii)	சபைக்கு சொந்தமாக பல்வேறு கடைகள் 72 வாடகையாளர்கள் மற்றும் 01 விழா மண்டபத்தில் இருந்து 03 மாதங்களுக்கு மேற்பட்ட நிலுவைக் கடை வாடகைகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,214,049 ஆக இருந்ததுடன் கடை வாடகையை செலுத்தாதிருந்த வாடகையாளர்கள் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை அறிவித்தல் அனுப்பி பணம் அறவிடப்படுகின்றது.	மேற்படி
(iii)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 3,391,279 ஆன விருந்தினர் விடுதி வாடகை நிலுவையில் ஆண்டின் போது எந்த ஒரு தொகையும் அறவிடப்படாது இருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடல் ரூபா 955,882 ஆக இருந்த போதும் ஆண்டின் போது அதில் எந்த தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு உரிய வாடகை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.	மேற்படி
(இ)	**முத்திரைக் கட்டணம்**		
	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும்,	2025 மே 31 ஆந் திகதி வரையில் ரூபா 28,300,075	மேற்படி

ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 74,377,704 ஆகும்	முத்திரைக் கட்டணம் கிடைக்கப் பெற்றுள்ளது.	

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
சபையினால் மீளாய்வாண்டின் போது வீட்டு நலனாளிகள் மற்றும் வியாபார நிலையங்களில் கழிவுப் பொருள் சேகரிக்கின்ற முறை தொடர்பாக நாளொன்றை உள்ளடக்கி கழிவுப் பொருள் சேகரிப்பதற்கு உரிய கால அட்டவணை 5,000 அச்சிடுவதற்கு ரூபா 55,435 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2024 செப்தெம்பர் வரையிலும் கால அட்டவணை 1,240 பகிர்ந்தளிக்கப்படாமல் சபையில் நிறுத்தி வைக்கப்பட்டமையால் செலவிடப்பட்ட ரூபா 13,748 சிக்கமற்ற செலவினமாக இருந்தது.	புதிய கால அட்டவணை தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக போதியளவான காலம் காணப்படாது இருந்தமையால் நடைமுறையில் மேற்கூறப்பட்ட திட்டத்தை அமுல்படுத்தும் இயலுமை தொடர்பாக அனுபவம் சனவரி மாதம் முதல் இரண்டு வாரங்களின் போது மேற்கொள்ளப்பட்டமையால் அச்சிடலுக்காக கோரிக்கை இடுவதற்கு சில தாமதம் ஏற்பட்டிருந்தது.	கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்துரைத்த பிரகாரம் நிறைவேற்றுதல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நகர சபைகள் கட்டளைச் சடத்தின் 118 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற மலக் கழிவுகள் உரிய பிரகாரம் அகற்றுவதற்காக சபையினால் களிவண்டி சேவை நடாத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை.	ஹொரணை பிரதேச சபையில் இருந்து களிவண்டி சேவை மேற்கொள்ளப்படுகின்றது.	சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2017 ஆம் ஆண்டின் பின்னர் இழப்பு நட்டப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.	நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பதிவேடுகள் நாளது வரையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(இ)	2019 திசெம்பர் 22 ஆந் திகதி தனியார் கம்பனிய ஒன்றில் இருந்து ரூபா 4,010,000 தொகை செலுத்தி 06 மென்பொருள் முறைமைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த முறைமை கொள்வனவு	எழுந்திருந்த பிரச்சனைகள் தொடர்பாக தற்போது உரிய நிறுவனத்தின் மூலம் சேவைகள் வழங்கப்படுகின்றமையால் இந்த பணம்	முறைமையை கொள்வனவு செய்வதற்கு முன் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	செய்வதற்கு முன் அதன் கிரயம் நலன்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்து சாத்தியவள ஆய்வு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் சபையினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் சேவைக் கட்டணமாக ரூபா 315,989 செலுத்தப்பட்டிருந்த போதிலும் முறைமையை அமுல்படுத்தும் போது பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டு இருந்ததுடன் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாது இருந்தது.	செலுத்தப்பட்டுள்ளது.	

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2023 சனவரி 01 ஆம் திகதி முதல் 02 வருட கால எல்லைக்கு உரித்தான பிரகாரம் புதிய பொதுச் சந்தை கட்டிடத்தில் 32 கடைகளுக்காக வழங்கப்பட்டிருந்த புதிய மதிப்பீடு பொதுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2023 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் மாதாந்த கடை வாடகை திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை 12 கடை வாடகையாளர்களிடம் இருந்து மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. 20 கடை வாடகையாளர்களிடம் இருந்து கடை வாடகை அறவிடாமையினால் ரூபா 2,115,750 வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	மிகுதி நிலுவைப் பணம் கணிப்பிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதியான 20 கடைகளுக்காவும் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவை மீதி விரைவாக அறவிடப்படல் வேண்டும்.
(ஆ)	2023 சனவரி 01 ஆம் திகதி முதல் 02 வருட கால எல்லைக்கு உரித்தான வகையில் புதிய சந்தை கட்டிடத்தில் (நடைபாதை கொட்டகை) 24 கடைகளுக்காக வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் உடன்படிக்கை செய்யாமல் அப்பெறுமதி 2023 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அறவிடப்பட்டிருந்த போதும் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய	உடன்படிக்கையின் பிரகாரம் பணத்தை அறவிடுவிதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

	தொகை 04 வாடகையாளர்களிடம் இருந்து மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்யாமல் வாடகைக்கு வழங்கப்பட்ட 19 கடைகளில் இருந்து பணத்தை அறவிடாமையினால் மீளாய்வாண்டில் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 13,440,000 ஆக இருந்ததுடன் இலக்கம் 13 என்ற கடை வாடகைக்கு வழங்கப்படாமல் காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 733,500 ஆகும்.		
(இ)	1980 செப்தெம்பர் 09 ஆந் திகதி இலக்கம் 105/3 என்ற வர்த்தமானியின் மூலம் ஹொரண விருந்தினர் விடுதியின் நிர்வாகம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மாதாந்த கட்டணம் அறவிடல் தொடர்பாக முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையினால் 2021 ஆண்டு முதல் நிலுவை விருந்தினர் விடுதி வாடகையை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு சபைக்கு முடியாது இருந்தது.	நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு உரிய வாடகைப் பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவை மீதி விரைவாக அறவிடப்படல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
டெக்டர் கலி வண்டி 2015 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது.	பழுதுபார்ப்பதற்காக மதிப்பீடு பெற்று இயந்திரப் பொறியியலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.	சொத்துக்களைப் பழுது பார்த்து பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையின் காணிப் பதிவேட்டின் பிரகாரம் 41 காணிகளின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள காணிகள்/ 04 கட்டிடங்கள் சபைக்கு கையேற்பதற்குரிய ஆவணங்கள் காணி நிர்ணய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	சபைக்குச் சொந்தமான காணிகளைக் கையேற்றல் வேண்டும்.

		எஞ்சியுள்ள காணி / கட்டிடங்கள் அதன் பிரகாரம் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	2002 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்படுகின்ற தீயணைப்பு வண்டி மீளாய்வாண்டின் இறுதியின் போதும் பழுது பார்க்கப்படாது இருந்ததுடன் சபையின் பெயரில் பதிவு செய்தல் மற்றும் காப்புறுதி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பதிவு செய்தல் மற்றும் காப்புறுதியை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	வண்டியை சபையின் பெயரில் பதிவு செய்து காப்புறுதி மேவுகை செய்து பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் சிரேஸ்ட நிலையில் 02 பதவிகளும், மூன்றாம் நிலையில் 01 பதவியும், இரண்டாம் நிலையில் 08 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 24 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது. ஆரம்ப நிலையில் பற்றாக்குறை ஊழியர்களின் எண்ணிக்கை 14 பேரும் சுகாதாரத் தொழிலாளிகள் ஆகும்.	சிரேஸ்ட நிலையில் மூன்றாம் நிலையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரதம செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலையின் வெற்றிடங்களை நிரப்புதல் அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் தற்போது கைவிடப்பட்டுள்ளது.	வெற்றிடங்களுக்காக ஊழியர்களை சேர்த்தல் வேண்டும்.
(ஆ)	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத 56 பதவிகளுக்காக அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 25/2014, 29/2019 மற்றும் இலக்கம் 24/0756/605/006-06 என்ற அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பதவிகளில் மீளாய்வாண்டில் இறுதியில் 56 பேர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	அவ்வப்போது காணப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் சேவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளனர்.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிப்பப்பட்ட பதவியணயினை விஞ்சி இரண்டாம் நிலையில் 05 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன்	அவ்வப்போது காணப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை ரீதியான அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத 08 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் நியமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.		
(ஈ)	மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 5,000 மற்றும் சேவையை விட்டுச் சென்ற ஆறு உத்தியோகத்தரகளிடம் இருந்து ரூபா 307,658 மீதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	ஊழியர் கடனை விரைவாக அறவிடல் வேண்டும்.

3.7 வாகன பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2015 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்படுகின்ற கம்பெக்டர் வண்டி கலி பௌசராக மாற்றி பழுதுபார்ப்பதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடம் ஆலோசனை கோரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியின் போதிலும் வண்டி பழுது பார்க்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் பழுது பார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	பொருத்தமான நடவடிக்கையை எடுத்து சொத்துக்களை பழுது பார்த்து பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	2017 ஆம் ஆண்டில் விற்குத் தீர்ப்பதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த டெக்டர் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்க வில்லை.	புதிய மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	இனங்காணப்பட்ட சொத்துக்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் உள்ளுராட்சி நிறுவனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் 2155/7 என்ற அதிவிசேட வர்த்தமாணியின் மூலம் விதிக்கப்பட்டுள்ள மேல் மாகாண நகர சபை நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்குகள் நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 08 இன் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிற்கான	2025/02/28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணனி வழுக்களின் காரணமாக அதனை சரி செய்து 2025.04.29 ஆந் திகதி மீண்டும் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டது.	சட்டத்தின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து வரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதிய அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2025 ஏப்ரல் 29 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 21 பிரிவுகளின் கீழ் மாதாந்தம், மும்மாதம் மற்றும் 06 மாதங்களுக்கு ஒரு தடவை உள்ளக் கணக்காய்வு மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 07 பிரிவுகளில் மாத்திரம் மேவுகை செய்யும் வகையில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் 16 மாத்திரம் விநியோகிக்கப்பட்டதுடன் ஏனைய 14 பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு முதல் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்வதற்கு விடய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	09 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 758,726 ஆக இருந்ததுடன் எந்த ஒரு தொகையும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருக்கவில்லை.	48 செலவின விடயங்களுக்கு இடையே உள்ளபடியான எந்த ஒரு தொகையும் செலவிடப்பாடாத செலவின விடயங்களின் எண்ணிக்கை 09 ஆகும்.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 16,268,382 ஆன 15 செலவின விடயங்களின் செலவினம் 50 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் போது சபை செயற்படாமையின் அப்படையில் ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டுக்கு இடையில் 50 சதவீதம் குறைவாக செலவிடப்பட்டிருந்தது.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிலைபேறான அபிவிருத்தின் கீழ் அதிகாரப் பிரசேத்தில் மந்த போசனை நிலைமையை குறைக்கும் நோக்கில் குறைந்த வருமானம் பெறும் கர்ப்பினித் தாய்மார்கள் / பாலூட்டும் தாய்மார்களுக்காக போசனை பொதி ஒன்றை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ரூபா 80,000 நிதியேற்பாட்டுத் தொகையின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	செயற்திட்டத்திற்காக 2025.01.16 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்தமையால் மேற்கூறப்பட்ட செயல்திட்டம் அமுல்படுத்துவதற்கு முடியாது இருந்தது.	நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.